# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளிலான
## தொலைக் கல்வி டிப்ளோமா- 2005/06

### மனித உரிமைகள் (பத்திரம் I)

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. தனி நபர்களது சட்ட உரிமைகள் என்ற தமது அந்தஸ்தினை மனித உரிமைகளானவை எத்தகைய பரிணாம வளர்ச்சிப்படியினூடாகப் பெற்றுக் கொண்டன என்பதை ஆராய்க.

2. ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் இடையிலான உறவுமுறையின் மீது கருத்துரைக்க. உமது விடையினை நடைமுறை உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

3. அடிப்படை உரிமைகளுக்கும் மனித உரிமைகளுக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

4. மனித உரிமைகளை வலுவூட்டி மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வகிக்கும் பங்கினை விளக்குக. அத்தகைய வலுவூட்டி மேம்படுத்தலுக்கும் பாதுகாத்தலுக்குமென ஐ. நா. கைக்கொள்ளும் இரண்டு பொறிமுறைகளை விவரிக்குக.

5. உமது கருத்தில், சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக, மனித உரிமைகளை வலுவூட்டி மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான போதியளவு சட்டக் கடப்பாடுகளை, இலங்கை பொறுப்பேற்றுள்ளதா? அத்தகைய கடப்பாடுகளின் கீழ் அரசின் செயலாற்றுகை தொடர்பில் நீர் திருப்திப்படுகின்றீரா?

6. நபர் ஒருவர், பொது அதிகாரிகளினால் புரியப்படும் தனது மனித உரிமைகளின் மீறல்களுக்கான நிவாரணங்களை இலங்கையில் எத்தகைய மன்றங்களிலிருந்து நாடிப் பெற முடியும்? உமது கருத்தில், கிடைக்கக்கூடியதான அந்த நிவாரணங்கள் பயன்வலுக் கொண்டவையாகுமா? இல்லையெனில் ஏன்?

*********

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகள் மற்றும் சமாதானக் கற்கைகளிலான தொலைக் கல்வி டிப்ளோமா- 2005/06

### சமாதானக் கற்கைகள் (பத்திரம் II)

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "சமாதானம் என்பது; யுத்தத்தின் அல்லது முரண்பாட்டின் இல்லாமை மட்டுமே என்றாகாது."

   இக்கூற்றின் மீது கருத்துரை ஒன்றை வரைக.

2. 'முரண்பாடு' ஒன்றைச் சுருக்கமாக வரையறை செய்க. ஏன் அத்துடன் எவ்விதத்தில் முரண்பாடு ஒன்று, போட்டி ஒன்றிலிருந்து வேறுபடுகின்றது?

3. முரண்பாட்டுக்கான பிரதான காரணங்கள் இரண்டினை விவரிக்குக.

4 உமது கருத்தில், முரண்பாடு ஒன்றில் இலகுவில் அடையாளங் காணப்படக் கூடியதான படிநிலைகள் யாவை?

5. சமாதான நடபடியொன்றில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வகிக்கக் கூடியதான பங்கு என்ன?

6. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மூன்றாந் திறமொன்றின் முக்கியத்துவம் என்ன?

*****